**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.வ.எண். | : | 56/2024 | வா.சா. | : | 2 |
| பெயர் | : | ரகமத்துல்லா | த/பெ. | : | முகமது இஸ்மாயில் |
| தாலுகா | : | நத்தம் | கிராமம் | : | நடுவனூர் |
| தேதி | : | 12.09.2025 | வயது | : | 47/2025 |

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2) நானும் இந்த வழக்கின் வாதியும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். வாதி தான் நடுவனூர் கிராம பள்ளிவாசலில் ஜமாத் தலைவராக உள்ளார் என்றால் சரிதான். பன்னியாமலை கிராமம் சர்வே எண்.236/10 நம்பரில் எனக்கு சொந்தமான இடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிராமத்தின் சர்வே எண்.236/11 நம்பரில் எனது தகப்பனார் முகம்மது இஸ்மாயில் அவர்களுக்கு சொந்தமான இடம் உள்ளது என்றால் சரிதான். அந்த இடங்களுக்கு மேல் புறமாக அரசுக்கு சொந்தமான தென் வடல் வண்டி பாதை உள்ளது என்றால் சரிதான்.

3) நானும் எனது சகோதரர் வாதியும் மற்றும் எனது குடும்பத்தினர் மேற்படி வண்டிப் பாதையில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக பிரதிவாதியின் மருமகன் ஷேக் அப்துல்லா என்பவர் புகார் மனுக்கள் கொடுக்கப்பட்டதன் விளைவாக ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது என்றால் சரிதான். இதன் காரணமாக ஏற்கனவே எங்கள் குடும்பத்தாருக்கும், பிரதிவாதியின் குடும்பத்தாருக்கும் இடையே முன்பகை இருந்து

வந்தது என்றால் சரியல்ல. என்னுடைய சத்யபிரமாண வாக்குமூலத்தில் வழக்கு விபரங்கள் தெரியும் என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். வாதி சேக் ராவுத்தர் என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பது எனக்கு தெரியும். வாதிக்கு பாத்தியமான இடத்தில் பிரதிவாதி வீட்டை காலி செய்ய வேண்டும் என கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். எந்த சர்வே எண்ணிற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 236/1 என்ற சர்வே எண்ணிற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எத்தனை சதுர அடிக்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சதுர அடி கணக்கு தெரியாது 1-3/4 செண்டிற்காக தாக்கல் செய்துள்ளார்.

4) வழக்கு சொத்துக்கான நான்குமால் தெரியுமா என்றால் தெரியும் தெற்கே ரோடு உள்ளது, மேற்கு மற்றும் வடக்கே முன்பு பிச்சையம்மாள் என்பவர் சொத்து இருந்தது தற்போது அந்த சொத்தை விற்று விட்டதால் யார் உள்ளார் என்று தெரியாது. கிழக்கே கனி ராவுத்தர் வீடு உள்ளது. வழக்கு சொத்தை நான் பார்த்துள்ளேன். கொலுசன் பீவி என்பவர் எனது தாயார் ஆவார். மேற்படி கொலுசன் பீவி என்பவர் வாதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். எந்த சர்வே எண்ணில் எத்தனை சொத்துக்கள், என்ன விஸ்தீரணத்தில் தானமாக எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி சரியாக தெரியவில்லை.

5) பிரதிவாதியானவர் வழக்கு சொத்திற்கு கிழக்கே உள்ள இடத்தில் தான் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதி இடத்தில் வசித்து வருகிறார். உண்மையில் பிரதிவாதி அவரது சகோதரர் கனி ராவுத்தர் என்பவரது வீட்டில் தான் வசித்து வருகிறார் என்றாலும், வாதி எனது சகோதரர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் சொத்தில் ஒரு வருடம் குடியிருக்க பிரதிவாதி கேட்டதாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி, வாதியிடம் குடியிருக்க அனுமதி கேட்ட சமயம் நான் அங்கு இல்லை என்றால் சரிதான்.

6) வாதி, பிரதிவாதியிடம் வீட்டை காலி செய்ய சொல்லி கேட்டதாகவும் அவர் மறுத்து விட்டதால் ஊர் பெரியவர்கள் மூலம் சமரசம் பேசியதாகவும் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். யார், யார் இருந்து சமரசம் பேசினார்கள் என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். வாதி இது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான் நான் கேள்விப்பட்டேன். புகார் கொடுத்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மதுரைக்கு போனவனுக்கு இங்கே எதுக்கு வீடு என பிரதிவாதி வாதியிடம் சொன்னதாக வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு சொன்னபோது நான் அந்த இடத்தில் இல்லை என்றால் சரிதான்.

7) பிராதில் வழக்கு சொத்து விபரத்தில் வீடு உள்ளது போன்று விபரங்கள் துலங்கப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, ஆனால் வீடு உள்ளது. வழக்கு சொத்து விபரத்தில் வீடு உள்ளது போன்று காட்டப்படாத காரணத்தினாலும், அதில் வாதி ஏற்கனவே குடியிருந்து வந்ததாக கூறப்படாத நிலையிலும், பிரதிவாதி வழக்கு சொத்தில் குடியிருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்திருக்கும் வழக்கு சொத்து வேறு என்றாலும் பிரதிவாதி குடியிருக்கும் சொத்து வேறு என்றாலும் சரியல்ல. ஏற்கனவே பிரதிவாதியின் மருமகன் எங்கள் மீது புகார் கொடுத்ததில் முன்பகை இருந்த காரணத்தினால் தான் தற்போது வாதியால் இந்த பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், பிரதிவாதி வழக்கு சொத்தில் குடியிருக்க வில்லை என்றாலும் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 12.09.2025 கையெழுத்து செய்துள்ளார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.09.12 18:03:04 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.